## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 32. ஸ்ரீஹரிபாலர்

---

வடதேசத்தில் வாழ்ந்த மிகப் பெரிய வியாபாரிதான் இவர்.இவர் குடும்பம் பாகவத பக்தியிலும் பகவத் பக்தியிலும் காலம் காலமாக லயித்த குடும்பம்.யார் எதைக் கேட்டாலும் உடனே அளிப்பது இவர்தம் குல வழக்கம்.

காலம் செல்லச் செல்ல குடும்ப வருவாய் குறைந்தது.வியாபாரம் ஒழிந்தது.ஆனால் பக்தியும் சேவையும் வளர்ந்தன.

ஒரு கட்டத்தில் திருடி வந்து பாகவத சேவைகள் செய்யும் அளவுக்கு ஹரிபால் மாறினார்.அவ்வினையின் விளைவை அறிந்து, தூய சேவையின் பொருட்டு வேறு வழியில்லாமல் திருடினார்.ஆனால் அதில் இருந்து ஒரு பைசா கூட அவர் தனக்கும் தன் குடும்பத்துக்கும் கைக்கொள்ளவில்லை.

**ஹரிலால் மனைவியின் ப்ரார்த்தனை**

தன் கணவன் சேவைக்கு என மேற்கொள்ளும் கொள்ளையை அவர் மனைவியால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.சதா பண்டரீ தெய்வத்திடம் தன் குறையைக் கூறி அவள் அழுவாள் இரவுகளில்.

அன்று அமாவாசை.
திருடப் போன ஹரிபால் ஒரு தம்பதிகளிடம் இருந்து புதிய பொன் நகைகளைக் கொள்ளை அடித்தார்.அதைக் கொண்டு மறுநாள் பல அன்பர்களின் உணவுக்கும் உடைகளுக்கும் ஏற்பாடு செய்யும் போது, அத்தம்பதியினர் வேற்று வேஷத்தில் இவரிடம் வருகிறார்கள்.

”ஐயா! இவ்வூரில் மிகவும் ப்ரபலமான வியாபாரியும் பாகவத அன்பருமான உம்மிடத்தில் ஒரு ப்ரச்சனை சொல்ல வேண்டும்.என் மனைவியின் கல்யாண நகைகளும் எமது நகைகளும் நேற்று இவ்வூர் பக்தர் ஒருவரால் கொள்ளை போனது.இது அநியாயம்.மிக உயர்ந்த ஒரு பொருள் எம்மிடம் இருக்க அதை விட்டுவிட்டு அவன் பொன்னைத் திருடிய கூத்தையும் எண்ணிச் சிரிக்கிறேன்.பண்டரீ தெய்வத்தின் பெயரால் அட்டூழியம் ஏற்படலாமா?” - கணவன்.

”அடியேன் இப்போது என்ன செய்ய வேண்டும்?” - ஹரிபால்.

”அவனைப் பிடித்து வாருங்கள், எம்மிடம் மிஞ்சிய அவ்வுயர்ந்த பொருளையும்

தரவேண்டும்,. பரவாயில்லை பாகவதக் கைங்கர்யத்துக்குத் தானே பயன்படுத்துகிறான்.” - கணவன்

”இதோ அத்திருடன் அடியேன் தான்! மிக உயர்ந்த அப்பொருளை எம்மிடம் தருக.அதைக் கொண்டு சேவைகள் செய்து விட்டு வருகிறேன், எமக்கு உரிய கடும் தண்டனை தருக!” என்று மண்டியிட்டு அமர்கிறார் ஹரிபால். [வினையின் பலனை எப்போதும் ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்டவர் இவர்]

அவர் காதில் த்வாத சாக்ஷரி மஹா மந்த்ரத்தை ஓதி அதையே ஜெபிக்கும் படிக் கட்டளையிட்டு அவரை விட்டுச் சென்றான்.

செய்த காரியம் சேவையாயினும் அது திருட்டுக்காரியம் மூலம் ஆவதை உணர்ந்து, அப்பாவம் பல அன்பர்களுக்கும் போகுமே என்பதை உணர்ந்து மனம் மாறினார் ஹரி பால்.ப்ரஹ்ம தத்வமான பாண்டுரங்கனே இளைய தம்பதி வடிவம் என்பதை உணர்ந்து தெளிந்தார்.

தன் கணவனின் மனமாற்றத்தால் மகிழ்ந்த அவர் மனைவி இறைவனுக்கு நன்றி கூறினாள்.பின்னர் அவர் தன் தகுதிக்கு ஏற்ப சேவை செய்தார்.காலப்போக்கில் அவரது மக்கள் வியாபாரத்தைத் தூக்கி நிலை நாட்டினர், பொருள் வரவு அதிகம் ஆனது, எப்போதும் போல சேவையும் அதிகம் ஆனது.

ஹரி ஓம்!